தோலாமொழித்தேவர்

இயற்றிய

சூளாமணி

சர்வகலாசங்கத்துப் பிரதமகலாபரீக்ஷைக்கு

நியமிக்கப்பட்ட

முதல் மூன்று சருக்கமும்

அவற்றின் குறிப்புரையும்.

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

பதிப்பிக்கப்பட்டது.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

MADRAS.

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY.

1895.

நூற்சிறப்பு

பொழிந்துபொருள்விளக்குமபோழ்ந்திருள்
கால்சீக்கும், இழிந்தவரை யேற்றி நிறுத்துஞ்—
செழுந்தரளத், * தோளாமணியைநிகர்க்குந்தோலா
மொழிதொகுத்த, † சூளாமணியெனுநற்சொல்.

தோளாமணி—துளையாத இரத்தினம்.

திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன்
புயலனைய கையன் றெவ்வைக், கைக்கொட்டி
நகைக்குமிகற் கார்வெட்டி யனையன்வள நாடற்
கேற்பப், பொக்கெட்டும் பத்துமிலான் புகழ்த்
தருமதீர்த்தன்மலர்ப் பதம்பூசிப்போன், சொற்
கெட்டா வரன்றோலா மொழிசூளா மணியுணர்
வோர் துறைகண் டோரே.

பொக்கு—குற்றம். தருமதீர்த்தன்—அருகக் கடவுள்.

---

* "தோளா மணியே தருதற் போலாதே தோலாமொழி" என்றும் பாடம். கிர் — மொழி

† தலைமையுடையார் விரும்பி அணியும் நவரத்தினங்களில் தோளாமணி இரண்டு, அவற்றின் பெயர் சிந்தாமணியுஞ் சூளாமணியுமாம். சூளாமணி — சூடாமணி, சிரோரத்தினம், சூளம் — சிகை, மணி — இரத்தினம்.

கணபதி துணை.

பதிப்புரை

சூளாமணி இரண்டாவது காவியமென அதன் பிரதிகளிலிருக்குங் குறிப்பீட்டினாற் றெரியவருகின்றது. முதலாவது காவியம் எதுவென்றும் மற்றைய காவியங்களின் வரிசைக்கிரமம் இன்னதென்றும் விளங்கவில்லை. சிறுகாவியம் ஐந்து. அவை உதயணகாவியம் சூளாமணி நீலகேசி நாககுமாரகாவியம் யசோதரகாவியமெனச் சிலர் சொல்லினும் அதற்கு நல்ல ஆதாரங்காணோம். நாககுமாரகாவியத்தை ஒழித்து மேருமந்தரபுராணத்தைச் சேர்ப்பாரும் உளர். ஆயிரத்து நானூற்றுச்சொச்சஞ் செய்யுளுள்ள மேருமந்தரபுராணத்தில் முதற்பாகமும் யசோதரகாவியமுங் காஞ்சிபுரத்திலிருந்த ஸ்ரீ பாகுபலிநயினாரால் அச்சிடப்பட்டன. மேருமந்தரபுராணம் முழுவதும் ஸ்ரீ புஷ்பரதச்செட்டியாரால் அச்சிடப்பட்டிருக்கின்றது. எஞ்சியன அச்சில் வரவில்லை.

இந்நூல் ஆருகதமகாபுராணத்திற் கூறிய நவவாசுதேவப் பிரதிவாசுதேவர்களில் திவிபிருஷ்டவாசுதேவனையும் அவ்வாசுதேவனுக்குப் பகையாய் அவதரித்த அயக்கிரீவப்பிரதிவாசுதேவனையுஞ் சரித்திரத்தை விரித்துக்கூறிச், சுரமை நாட்டின்கண் போதனமா நகரத்திலிருந்து அரசுபுரிந்த பயாபதி அரசன் தன் குமாரனை அவ்வாசுதேவனைப் பூமியாளவைத்துத் தன் தேவிமாரோடு துறவியல் பூண்டு முத்திபெற்ற கதையை எடுத்துச்சொல்லும்.

திவிட்டராசன் குணாதிசயங்கள் திருமாலின் அவதாரமாகிய கண்ணபெருமானையும், திவிட்டனுக்கு மூத்தோனாகிய விசயன் குணாதிசயங்கள் கண்ணன் அண்ணன் பலபத்திரனையும் இலக்ஷணங்களோடு பெரும்பாலும் ஒத்திருக்கின்றன.

மகாபுராணத்தில் இக்கதை சுருக்கமாகக் காணப்படுவதாதலின் அதனை இதற்கு முதனூலென்று சொல்லப்போகாது. "விண்ணைக் கிறைவன் விளைசூழ்முடி வேந்தன் மங்கை— பஞ்சிக் கலுங்குஞ் சிலம்பாடிப் பாவை பூவார்—வஞ்சிக் கொடிபோல் பவள்காரணமாக

வந்த—செஞ்சொற் புராணத் துறையின்வழிச் சேறு மன்றே” எனத் தேவர் பாயிரத்திற் சொல்லியிருக்கின்றனர். மகாபுராணம் அப்படி ஒரு வித்தியாதரமகளின் காரணமாகப் பிறந்ததாகவுங் கதையில்லை. அன்றியுந் தீர்த்தங்கரர் இருபத்து நால்வர் சக்கரவர்த்திகள் பன்னிருவர் பலதேவர் ஒன்பதின்மர் வாசுதேவர் ஒன்பதின்மர் பிரதிவாசுதேவர் ஒன்பதின்மராகிய திரிசஷ்டி சலாகா புருஷர்களின் சரித்திரத்தைக் கூறும் மகாபுராணந் திவிட்டன்றேவி சுயம்பிரபையின் பொருட்டு எழுதப்பட்டதென்று சொல்லுதல் பொருந்தாது. மேலுந் திவிட்டன் முதல்வாசுதேவனும் பதினோராவது தீர்த்தங்கரராகிய சிரேயசுவாமிகள் காலத்தவனுமாகவே அவனுக்குப் பின்னிருந்த தீர்த்தங்கரர் வாசுதேவப் பிரதிவாசுதேவர்கள் முதலியோருடைய கதைகள் அவள் நிமித்தம் எழுதப்படமாட்டா. அவளேதுவாகப் பிறந்து சூளாமணிக்கு முதனூலாக இருந்ததோர் புராணம் வேறு இருத்தல் வேண்டும். பற்பல சமணவித்துவான்களிடத்து விசாரித்தும் அஃது இன்னதென்று விளங்கவில்லை. பெயருமில்லாது இறந்துபோன நூற்களில் அதுவும் ஒன்றாக இருக்கலாம்.

சூளாமணியென்றோர் வடமொழிப் புராணம் இருந்ததாகவுந் தெரியவில்லை. செஞ்சொற் புராணத்து வஞ்சிக்கொடிபோல்பவள் காரணமாக வந்த உரையின் வழியென்று அன்னுவயப் படுத்தி மகாபுராணத்தை முதனூலாகக் கொள்ளக் கிடந்ததாலோவெனின், இக்கதை மகாபுராணத்தில் மிகச் சுருங்கிற்றென விடுக்க.

யாப்பருங்கல விருத்தியிலும் அதனை முதனூலாகக்கொண்டு அமுதசாகரர் இயற்றிய காரிகைக்குக் குணசாகரர் சகாப்தம் ௨௦௦-௩௦௦ அளவில் எழுதிய விரித்துரையிலுஞ் சூளாமணியிலிருந்து அநேகசெய்யுட்கள் இலக்கியமாக எடுத்துக் காட்டப்பட்டிருத்தலானுஞ், சூளாமணியின் காலஞ் சோழமண்டலத்திற் கார்வெட்டிநகரத்திலிருந்து அரசுபுரிந்த விசயராசன் காலமென்பது நூற்சிறப்பிற் "திக்கெட்டும் புகழ்படைத்த திறல்விசயன்" என்றற்றொடக்கத்துச் செய்யுளான் அறியக்கிடத்தலானும், கார்வெட்டிநகரின் காலம் உறந்தைக்கு முந்தியதாதலானும், நூல் அரங்கேறியது சேந்தனவைக்களத்தாதலானும், இந்நூலின் வயது ஆயிரத்தைஞ்ஞூறு வருஷத்திற் குறையாது.

எவ்வெப்பாஷையிலும் பெருங்காவியங்கள் தோற்றிய பின்னரும் ஆங்காங்குக் காலந்தோறுஞ் சிறுகாவியங்கள் உதித்து நடைபெறுதல் வழக்காயினும், சிலபல சிறுகாவியங்கள் செனித்தபின்னரே பெருங்காவியங்கள் பிறத்தல் இயல்பு. மேற்கூறிய சிறுகாவியங்களை ஒழித்தால் சமணருக்குச் சிந்தாமணிக்கு முன்னர்த் தோற்றிய சிறுகாவியங்கள் வேறில்லை. இருந்து இறந்தனவாகவுங் கேள்வியில்லை. அன்றியுங் குணசாகரர் காலத்திற் சிந்தாமணி முதலிய பெருங்காவியங்கள் இருந்தனவாகில் விசேஷமாக அவற்றினின்றே உதாரணங்கள் காட்டியிருப்பர். ஆதலால் இந்நூல் ஆருகதப் பெருங்காப்பியங்களுக்கு முந்தியதென்று கொள்ளல் தவறாகாது.

யகர ஆசெதுகைக்குக் "காய்மாண்ட" என்னுஞ் சிந்தாமணிச் செய்யுள் காட்டாக எடுத்து ஆளப்பட்டிருக்கின்றதாலோவெனின், ஆண்டு உரையாசிரியர்கள் காட்டியது * "வேய்காயு மென்பணைத் தோள்" என்னுஞ் சூளாமணிச் செய்யுளென்றும், அஃது ஆசிரியராற் சவலைவிருத்தத்திற்கு ஓர் இலக்கியமாதற்பொருட்டு

* சூளாமணி அரசியற்சருக்கம், ௬௦௬—ம் செய்யுள்.

வைக்கப்பட்டது உணராது, * கொகுடியென்பதோர் மரப்பெயருளதென்று அறியார் கோங்கமென்று மாற்றினாற்போல, அச்செய்யுளில் இரண்டாம் அடி சீர் குறைந்திருப்பது பிற்காலத்துச் சிதைவென்று கருதி, அதனை ஒழித்து, அதற்குப் பதிலாகக் "காய்மாண்ட" என்றற்றொடக்கத்துச் செய்யுளை இக்காலத்தில் யாரோ சொருகிவிட்டார்களென்றும், எழுபது எண்பது வருஷத்திற்கு முந்திய பழைய சுவடிகளில் "வேய்காயுமென்பணைத்தோள்" என்னும் உதாரணமே இன்னுங் காணலாமென்றும், ரகர ழகர ஆசெதுகை மூன்றாமெழுத்தெதுகை முதலியவைகட்குச் சூளாமணியிலக்கியங் கொண்ட உரையாசிரியர்கள் யகரமொன்றற்கு மாத்திரஞ் சிந்தாமணியிற் கைவைத்தற்கோர் அவசியம் இருக்கமாட்டாதென்றுஞ், சிந்தாமணியிற் புதிதாகத்தேடி எடுத்ததென்பதற்கு அஃது அக்காப்பியத்தின் முதலாவது இலம்பகத்தின் † முதலிலே கிடப்பதுதானே ஒரு சான்றென்றுங் கூறி விடுக்க. நூல்முழுவதிலுஞ் சிந்தாமணி உதாரணம் வேறில்லையே.

* சூளாமணி தூதுவிடுசருக்கம், ௪—ம செய்யுள.
† சிந்தாமணி நாமகளிலம்பகம், ௨—ம ,,

உ

திருச்சிற்றம்பலம்.

ளா ா மணி

—∘∘:∘∘—

பாயிரம்.

காப்பு.

விருத்தக் கலித்துறை.

*சந்தம்;—மா, புளிமா, புளிமாங்கனி, தேமா, தேமா.

வென்றான் வினையின் றொகையாகி விரிந்து
தன்க, ணின்றாய்ப்பரந்த வுணர்வின்றொழியா
துமுற்றுஞ், சென்றான்றிகழுஞ் சுடர்சூழொளி
மூர்த்தியாகி, நின்றானடிக்கீழ்ப்பணிந்தார்வினை
நீங்கிநின்றார்.

வினையின் றொகையை வென்றானாகிச் சென்றானும் நின்றானும் ஆகியவனது அடியெனக் கூட்டுக. "வினையின்றொகையாய" என்றும் பாடம். அதற்கு வினையின் தொகையாயவற்றை வென்றானும் சென்றானும் நின்றானுமெனக்கொள்க. வென்றானாய பின்னரேமற்ற இயல்புகள் நிகழ்தலின் ஆகியென்னும்பாடஞ் சிறப்புடைத்து. தொகையாயெனப்பாடங் கொண்டார்கூற்றுச் சந்தத்திற்கொவ்வாதென்றொழிக.

உணர்வின்றொழி சந்தநோக்கிய விகாரம்

---

* சந்தங்களில் ஒரு நேரசை முன்பின் நேரசையோடு சேர்ந்து நிரையசையாதலும், ஒரு நிரையசை இரண்டு நேரசையாகப் பக்குவிடலும், அவ்வாறு பக்குவிட்ட நேரசை முன்பின் நேரசையோடொன்றி நிரையசையாதலும் செய்யுளியல்பாதல் அவ்விகாரங்குச் சீர்பிரிக்குமிடத்துக் காணலாமாயினும் ஆண்டு சந்தம் பிறழாது நிற்குமென்றறிக. ஓரோவிடத்து ஒற்றொழிந்து அசைகோடலும்வேண்டும். தொகையாகிவிரிந்து என்னும் புளிமாங்கனியும் தேமாவுமாகிய சந்தக் கூறுபாடு தொகையாகி விரிந்து எனப் பகுத்துவிட்டுப் புளிமாங்காய் புளிமா எனச் சீர்பிரிந்தமை காண்க

சுடர்சூழொளி, சந்திராதித்தியம் நித்தியவிநோதம் சகலபாசனமென்னும் மூன்று பிரகாரங்களையுடைய பிரபாமண்டலம். ஆகவே இஃது அருகசரணம்.

நூற் பொருளும் பயனும்.

அங்கண் ணுலகிற் கணிவதுஞ் சுடராகிநின்
றான், வெங்கண்வினைபோழ்ந் தவன்மேற்சரண்
சென்ற மேனாட், பைங்கண்மதாவைப பருவா
யரி யேறுபோழ்ந்த, செங்கண்ணெடியான் சரி
தம்மிது செப்பலுற்றேன். (௧)

அரியேறு போழ்ந்த கதையைச் சீயவதைச் சருக்கத்திற் காண்க.

போழும், செய்யுமென்முற்று. செப்பலுற்றேன், ஆதலால் நின்றான் என் வினைபோழுமென்க. செய்யுமென்னும் வாய்பாட்டெச்சமாக்கிப் போழ்ந்திருவைச் சுடராகிநின்றான் சரண்சென்ற மேனாளெனினும் அமையும். அஃதாயின் நூற்பொருளை உணர்த்திற்றென்க. சுடராகி நின்றான் சிரேயசுவாமிகள்.

* மேனாள், ௨௪ தீர்த்தங்கரருட் பதினோராவது சிரேயசுவாமிகள் காலம்

மகரவொற்றுச் சந்தநோக்கி விரிந்தது.

* ௧ விடபர், ௨. அசிதர். ௩. சம்பவர், ௪. அபிநந்தனர், ௫ சுமதி, ௬ பதுமப்பிரபை, ௭ சுபார்சுவர், ௮ சந்திரப்பிரபை, ௯. புட்பதந்தர், ௧௦. சீதளர், ௧௧. சிரேயர், ௧௨ வாசுபூச்சியர், ௧௩ விமலர், ௧௪ அனந்தர், ௧௫. தருமர், ௧௬ சாந்தியர், ௧௭. குந்துவர், ௧௮ அரர், ௧௯. மல்லியர், ௨௦ முனிசுவிரதர், ௨௧. நமிகள், ௨௨. நேமிநாதர், ௨௩. பார்சுவர், ௨௪. ஸ்ரீ வர்த்தமானர்.

அவையடக்கம்.

கொற்றங்கொளேமி நெடுமால் குணங்கூறவிப்பா, நூற்றிங்கொர் காதலகிலாத் தமிழ்நூற் கூறுற்றேன், மற்றிங்கொர் குற்றம் வருமாயினுநங் கள்போல்வார், சுற்றங்கள் காப்பா ரறிவிற்பெரி யார்களன்றே. (உ)

பால் — உரிமை, படைமை. கூறுற்றல்—சொல்லல். "மொய்ந்நெறியெய்யச் சொன் றூற்கலுறமேற்னை" என்றார் கம்பரும். நூற்கல் உற்றேன் எனக் கொள்வா மெனின், நூற்றலே மரபாதலானும், "பஞ்சிதன் சொல்லாப் பனுவலிழையாக" நூற்கப்படுவது நூலன்றிச் சொல்லன்மையானும் அது பொருந்தாதென்க.

அரங்கு.

நாமாண்புரைக்குங்குறையென்னினுநாம வென்வேற், றேயூரண்டலங்கற்றிருமானெடுஞ்சேந் தனென்னுந், தூமாண்டமிழின்கிழவன்சுடராச மார்பிற், கோமானவையுட் டெருண்டார்கொ ளப்பட்டதன்றே. (௩)

குறையென்னினுந் தெருண்டார்கொளப்பட்ட தன்றே! ஆதலால் நா மாண்புரைக்குமென்க. *"கவ்வொடெதிர்வும்" எனக் கும்விகுதிகொண்டு நாம் உரைக்குமெனினும் இழுக்காது. வென்—வெற்றி.

---

* நன்னூல், பதவியல், கஅ-சூத்திரம்.

நூன்மாண்பு.

செங்கணெடியான் றிறம்பேசிய சிந்தை
செய்த, நங்கண்மறுவு மறுவன்றுநல் லார்கண்
முன்ன, ரங்கண் விசும்பி னிருள்போழ்ந்தகல்
வானெழுந்த, திங்கண்மறுவுஞ்சிலர் கைதொழச்
செல்லுமன்றே. (௪)

நல்லார்கண் முன்னர்த் திங்கண்மறுவுஞ் சிலர் கைதொழச் செல்லும். அஃதொப்பச் சிந்தைசெய்த மறுவும் மறுவன்றெனக்கூட்டுக. பேசிய, செய்திய வென்னும் வாய்பாடு. பேசுதல்—துதித்தல். நல்லார்—கற்புடைமகளிர். சிலர்—கன்னிமையழியாதவர்.

முதனூல்.

விஞ்சைக்கிறைவன் விரைசூழ்முடி வேந்
தன்மங்கை, பஞ்சிக்கனுங்குஞ்சிலம்பாரடிப்பா
வைபூவார், வஞ்சிக்கொடிபோல் பவள்காரண
மாகவந்த, செஞ்சொற்புராணத்துரையின்வழிச்
சேறுமன்றே. (௫)

செஞ்சொற்புராணத்தை மகாபுராணமெனின், செஞ்சொற் புராணத்து வஞ்சிக்கொடிபோல்பவள் காரணமாக வந்த உரையின் வழியென்று முடிக்க.

பாயிரம் முற்றிற்று.

ஆக விருத்தம் - ௫.

முதலாவது

நாட்டுச்சருக்கம்.

கலிவிருத்தம்.

சந்தம்;—விளம், விளம், மா, கூவிளம்

மஞ்சுசூழுமணிவரையெடுத்தமாலம
ரிஞ்சசூழணிநகரிநங்கைநாடது
விஞ்சைநீளுலகுடன்விழாக்கொண்டன்னது
துஞ்சுநீணிதியதுசுரமையென்பவே. (க)

மணிவரை—* கோடிமலை. திவிட்டன் திருமாலவதாரமாதலாலும் ஈண்டும் எடுத்த மால் என்றமையாலும் கோவர்த்தனகிரியெனினும் அமையும்.

விஞ்சைநீளுலகு — வித்தியாதரருலகு. † பதினெண்கணத்துளொருகணம். விழாக் கொண்டன்னதென்றூர் திவிட்டன் விவாகாதிகளை எதிர்நோக்கி.

பங்கயங்காடுகொண்டலர்ந்தபாங்கெலாஞ்
செங்கயலினநிரைதிளைக்குஞ்செல்வமு
மங்கையர்முகத்தனமதர்த்தவாளரி
யங்கயற்பிறழ்ச்சியுமருதநீரவே.

அரசியற்சருக்கம் ௫௪க, ௫௪உ.

அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பிசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர்.

ஆங்கவையொழிநடையன்னத்தோட்டன
தீங்குரன்மழலையாற்சிலம்புந்தண்பணை
* மாங்குயிலனையவர் மனைச்சிறடி
யோங்கிருஞ்சிலம்பினுஞ்சிலம்புமாகளே.

தோடு — குழாம். நடையையுடைய குழாத்தின் மழலையாலென்க.

நிழலகந்தவழ்ந்துதேனிருந்துதாதுசேர்
பொழிலகம்பூவையுங்கிளியும்பாடுமே
குழலகங்குடைந்துவண்டறங்குகோதையர்
மழலையும்யாழுமேமலிந்தமாடமே.

காவியுங்குவளையுநெகிழ்ந்துகள்ளறும்
பூவியுண்டடர்த்ததேனகத்துமாதர்பாற்
றவியோண்குழையயறடவுங்கண்டவ
மேவிநின்றவளையுமெலியநோக்குமே. (௫)

வானிலங்கருவியவரையுமுல்லைவாய்த்
தேனிலங்கருவியதிணையுந்தேறல்சேர்
பானலங்கழனியுங்கடலும்பாங்கணி
நானிலங்கலந்துபொனனரலுநாடதே. (௬)

கருவிய — கூட்டமான. திணை—இடம்.
பூமிக்கு நானிலமென்று பெயர் வழங்குதற்குக் காரணம் இதனால் அறிக.

* செய்யுட்களிற் தடித்த எழுத்தில் வருவன ஆக்கியோன் வாக்கல்ல

வேறு.

சந்தம்;—ஒருமாவும் மூன்றுகூவிளமும். இதனை மா, தேமா, கருவிளம், கூவிளமாகவும் வகுத்து இருநிலச் சந்தமென்பாருமுளர்.

முன்றிலெங்குமுருகயாபாணியுஞ்
சென்றுவீழருவித்திரளோசையும்
வென்றிவேழமுழக்கொடுகூடிவா
னொன்றிநின்றதிரும்மொருபாலெலாம். (எ)

முருகு – வெறியாட்டு. முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாதலின் இப்பெயர் பெற்றது.

மகரஞ் சந்த நோக்கிய செய்யுள் விகாரம்.

ஏறுகொண்டெறியுமப்பண்ணைக்கோவலர்
கூறுகொண்டெழுகொன்றையந்தீங்குழல்
காறுகொண்டவர்கம்பலையென்றிவை
மாறுகொண்டுசிலம்புமொர்மாடெலாம். (அ)

ஏறு, கூறு இவை முதனிலைத்தொழிற்பெயர்.
காறு – கொழு.

அணங்கனாரணவாடன்முழவமுங்
கணங்கொள்வாரணக்கம்பலைச்செல்வமும்
மணங்கொள்வாரமுரசம்வயலோதையு
மிணங்கியெங்குமிருக்குமொர்பாலெலாம். (கூ)

அணவுதல் – சேர்தல், பொருந்தல்.

கலவரின்னியமுங்கடலுசிறா
புலவுநீர்ப்பொருபூணெறிபூசலும்
நிலவுவெண்மணனீளிருங்கானல்வா
யுலவுமோதமுமோங்குமொருபாலெலாம். (௧௦)

கைவிரிந்தனகாந்தளும்பூஞ்சுனை
மைவிரிந்தனநீலமும்வான்செய்நாண்
மெய்விரிந்தனவேங்கையுஞ்சோர்ந்ததே
னெய்விரிந்தனநீளிருங்குன்றெலாம். (௧௧)

கொன்றையுங்குருந்துங்குலைக்கோடலு
முன்றிலேறுமுல்லையம்பந்தரு
நின்றுதேனிரந்தூதவிரிந்தரோ
மன்றெலாமணநாறுமருங்கினே. (௧௨)

நாறவிண்டனநெய்தலுநாண்மதுச்
சேறுவிண்டசெந்தாமரைக்கானமு
மேறிவண்டினமூன்றவிழிந்ததே
வூறிவந்தொழுகும்மொருபாலெலாம். (௧௩)

கோடுடைந்தனதாழையுங்கோழிருண்
மோடுடைந்தனமூரிக்குவளையுந்
தோடுடைந்தனசூழுங்கற்பகக்
காடுடைந்தனபோன்றுளகானலே. (௧௪)

சூசம - தாமரை ஆம்பல் முதலிய நீர்ப்பூவின் பொதுப்பெயர்.

நீலவால்வட்டத்தினிறங்கொளக்
கோலவாம்பியகோடியாகுன்றின்மே
லாலுமாமழைமீண்டபகிலாகத்தொறு
மாலுமாமயிலாலுமொராபாழ்லெலாம். (கரு)

நக்கமுல்லையுநாகிளங்கொன்றையு
மக்ககாகடர்கொண்டொலிவண்டறா
முவககாமணற்கிண்டியிளம்பெடைப்
பக்கநோக்கும்பறவையொர்பாலெலாம். (கசா)

துள்ளுறுக்கவுட்கொண்டுசுரும்பொடு
கள்ளுறுதசெந்தாமரைககானகத்,
துள்ளுறுதுதைந்தோகையிரட்டுறப்
புள்ளுறுபுலம்பினபொய்கையே. (கஎ)

துள்ளல் தாக்க உட்கொண்டு – மீன் முதலிய வற்றின் துள்ளல் தாக்கவும் அவற்றை உட்கொண்டு. துள்ளிருவென்றும் பாடம. அதற்கு இருவைக் கவுளினகத்துக் கொண்டு என்க.

வெண்முளைப்பசுந்தாமரைமென்சுருண்
முண்முளைத்திரளோடுமுனிந்துகொண்
டுண்முளைத்திளவன்னமுழககலாற
கண்முளைத்ததடத்தகழியெலாம். (கஅ)

செஞ்சுருளென்றும் பாடம். வெண்முளை பசுந் தாமரை செஞ்சுருள் முரண்டொடை.

காந்தளங்குலேயாற்களிவண்டினங்
கூந்தளம்பிடிவீசக்குழாங்களோ
டேந்துசந்தனச்சாரலிருங்கைம்மா
மாந்திநின்றுறங்குந்வரைமாடெலாம். (கக)

கூந்து - பானைக்கழுத்துமயிர்; கூந்தலின் விகாரம். கூந்தினையுடைய இளம் பிடி குலேயால் வண்டினத்தை வீச வரைமாடெலாம் கைம்மாக் குழாங்களோடு சாரலில் மாந்தி நின்று உறங்குமென்க.

தார்செய்கொன்றைதளித்ததண்டேறலுண்
டோசெய்கின்றவிளம்புலிருங்குழைக்
கார்செய்காலேகறிக்தொறுமெல்லவே
போர்செய்மாவினம்பூத்தண்புறணியே. (உ0)

செய்ம், செய்யுமென்னும் முற்று.

தளித்தல் — துளித்தல், புறணியிற் கார்செய்காலேயில் இளம்புல்கறிக்தொறும் ஆவினம் மெல்லப் போர் செய்யுமென்க. மெல்ல என்றதனுற் பொய்ப்போரென உரைக்க

அள்ளிலேக்குவளேத்தடமேய்ந்தசைஇக்
கள்ளலேத்தகவுட்கருமேதிபா
லுள்ளலேத்தொழுகக்குடைந்துண்டலாற்
புள்ளலேத்தபுனலபுலங்களே. (உக)

அள் — நெருக்கம்.

கெண்டையஞ்சினைமேய்ந்துகிளர்ந்துபோய்
முண்டகத்துறைசேர்ந்தமுதலைமா
வண்டலவாரகழைமாமுதற்கீழுறங்
கண்டுநின்றுநினைவுங்கழியெலாம். (உஉ)

முதலையை நக்கீரர் மாவென்பர். நச்சினார்க்கினியாரும் அடியார்க்கு நல்லாரும் மீனென்ப.

கண்ணிலாங்கழையின்கதிர்க்கற்றையு
மண்ணிலாங்குரலவ்வார்தினைவாரியு
மெண்ணிலாங்கவின்வளைவிட்டமு
முண்ணிலாங்குலவாமையுயர்ந்தவே. (உங)

கண் நிலாம்; மண்ணில் ஆம்; எண்ணில் ஆங்க; உண்ணில் ஆங்கு எனப் பிரிக்க, நிலாம் ஆங்க அசைநிலை.

பேழ்த்தகாயினபேரெட்பிறங்கிணர்
தாழ்த்தகாயனதண்ணவரைக்கொடி
சூழ்த்தகாய்த்துவரைவரகென்றிவை
யூழ்த்தபோன்றுளமுல்லைநிலங்களே. (உச)

பேழ்த்த — அகன்ற, அதாவது பிளந்த; பேழென்னும் இடைச்சொல்லடியாற் பிறந்த வினை. பேழ்வாய்

இறையனாரகப்பொருள், க-ம சூத்திரம்.

† தொல்காப்பியம், அகத்திணையியல், கஅ-ம் சூத்திரம். சிலப்பதிகாரம் பதிகவுரை.

என்பதுபோல. வெள்ளெள்ளுக்குக் காரெட்போலச் சிற்றெள்ளுக்கு எதிர் பேரெள். மூழ்த்தல்-மொய்த்தல்.

மேடுகொண்டெழுமூரிக்கழைக்கரும்
பூடுகொண்டபெரும்பரொடுளவிராய்த
தோடுகொண்டபைங்காய்துவளசெந்நெலின்
காடுகொண்டுளகண்ணகனாடெலாம். (௨௫)

தோடு-கூட்டம், கீழே காட்டிய மேற்கோளிற் "கணத்தலை" என்றாற்போல.

துவளல்-பாரந்தாங்கமாட்டாது வளைதல். "கணத் தலை* வணங்கவும்" எனவும் "தோந்தநூற்—கல்விசோ மாந்தரி † னிறைஞ்சி" எனவும் பிறரும் கூறினர்.

சங்குநித்திலமுந்தவழிப்பியுந்
தெங்குந்தீங்குலையூறியதேறலும்
வங்கவாரியுமலைவாரியுந்
தங்குவாரியதண்கடனாடெலாம். ௨௬)

வங்கவாரி-கப்பற்றுறைமுகம். அலைவாரி-அலையின் மிகுதி. வாரிய-சீரினையுடைய.

கடனாடெல்லாம் வங்கவாரியிலும் அலைவாரியிலும் சங்கும் நித்திலமும் இப்பியுந் தேறலுந் தங்கும் வாரியவெனக் கூட்டுக.

---

* இரகுவமிசம், நாட்டுப்படலம், ௩௫-ம் செய்யுள்

† சிந்தாமணி, நாமகளிலம்பகம், ௨௪-ம் ,,

வேறு.

சந்தம்;—விளங்., விளம், மா, கூ. விளம்.

கொடிச்சியர்புனத்தயற்குறிஞ்சிநெய்பக
ரிடைச்சியர்த்துப்பயற்கமழுமேழையங்
கடைச்சியர்களையெறிகுவளைகானல்வாய்த்
தொடுத்தலர்பிணையலார்குழலுட்டோன்றுமே.

கலவர்தஞ்சிறுபறையிசையிற்கைவினைப்
புலவர்தேம்பிழிமகிழ்குரவ்வைபொங்குமே
குலவுகாற்கோவலர்கொன்றைத்தீங்குழ
லுலவுநீள்சுணைமாவுறங்குமென்பவே. (உ௪)

மாக்கொடியானையுமௌவற்பந்தருங்
கார்க்கொடிமுல்லையுங்கலந்துமல்லிகைப்
பூக்கொடிப்பொதும்பருங்கானஞாழலுந்
தூக்கொடிகமழ்ந்துதாந்துறக்கநோக்குமே. (உ௫)

யானை — ஒரு வாசனைப் பூஞ்செடி; பருத்த கொடியாய் வளர்தலின் மாக்கொடியென்றார். மா, வண்டென ஓதி மாக்கொடியால் நையும் மௌவற் பந்தரெனினும் அமையும். மௌவல் — காட்டுமல்லிகை. கார்க்கொடியென்றார் கார்காலத்துப் பூத்தலின். தூக்கொடி — தூய்தாகிய கொடி; ஈண்டுக்கொடி வாசனை. கடியென்றும் பாடம். முன் மூன்றுங் கொடியாதலின் இதுவுங் கொடியென்பதே சிறப்பு.

நாட்டுச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் - ௩௫.

இரண்டாவது

நகரச்சருக்கம்.

——∘⁜∘——

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சந்தம்;-விளம், மா, தேமா: விளம், மா, தேமா.

சொன்னநீர் வளமைந்தாய சுரமைநாட்
டகணிசார்ந்து, மன்னன் வீற்றிருந்துவைகுநால
வாவகுக்கப்பட்ட, பொன்னவிர்புரிசைவேலிப்
போதனமென்பதுண்டோர், நன்னகர்நாகலோக
நகுவதொத்தினியதொன்றே. (க)

அகணி-நடு; மருதநிலமெனினுமாம்.

சங்கமேய்தாங்கவேலித் தடங்கடற்பொய்
கைபூத்த, வங்கண்மாஞாலமென்னுந்தாமரைய
லரினங்கேழ்ச்; செங்கண்மால்சுரமையென்னுந
தேம்பொர்குட்டகத்துவைகு, நங்கையார்படிவங்
கொண்டநலத்ததுநகரமன்றே. (உ)

இச்செய்யுள் முற்றுருவகம்.

செஞ்சுடாக்கடவுடிண்டே ரிவுளிகாறிவ
ளவூன்று, மஞ்சுடைமதர்துவநெற்றி வானுழுவா
யின்மாடத், தஞ்சுடரிஞ்சியாங்கோரகழணிந்த
லர்ந்ததோற்றம், வெஞ்சுடர்விரியுமுந்நீர் வேதி
ஞைகமீதிட்டன்றே. (ங)

இரும்பிடுதொடரின்மாவி னெழுமுதற்பி
ணித்தயானைக். கரும்பிடுகவளமூட்டுங் கம்பலை
கலந்தசீர்வீ, ணரும்பிடையலர்ந்தபோகினல்லி
யுண்டாரறுகினாறு, சுரும்பொடுதுதைந்துதோன்
றுஞ்சூழ்மதிலிருக்கையெல்லாம். (௪)

எழுமுதல்-அடி. யானைக்கம்பலை, கவளமூட்டுங்கம்பலை யென்க. யானை நான்காம் வேற்றுமைத் தொகையெனினுமாம்.

மானளாமதர்வை நோக்கின் மையரிம
ழைக்கணாருந், தேனளாமுருவக்கண்ணிச் செல்
வருந்திகழுமாடங், கானளாங்காமவல்லிகற்ப
கங்கலந்தகண்ணுன், வானளாய்மலர்ந்துதோன்
றமணிவனாயனையதொன்றே. (௫)

அளாம்-அளாவும். கண்ணுன்-இடங்கடோறும்.

வேறு.

கலிவிருத்தம்.

சந்தம்;-விளம், விளம், மா, கூவிளம்,

அகிலெழுகொழும்புகைபடிந்திருடவு
முகிலிசையென்றுழ்மாமுரன்றுவிம்மவந்
துகிலிகைக்கொடியனார்மின்னிற்றோன்றவு
மகலினமலையொடுமாடமென்பவே. (௬)

துகிலிகை-சித்திரம்.

கண்ணெலாங்கவர்வனகனககூடமும்
வெண்ணிலாச்சொரிவனவெள்ளிவேலியுந்
தண்ணிலாத்தவழ்மணித்தலமுஞ்சார்ந்தரோ
மண்ணிலியன்றிலமதலைமாடமே. (௭)

மதலை—கொடுங்கை, தூண்.

மாடவாய்மணிமுழாவிசையுமங்கைய
ராடுவார்சிலம்பிணையதிருமோசையும்
பாடுவார்பாணியும்பயின்றுபல்கல
மூடிமாணகரதுமுரலவதொக்குமே. (௮)

பாணி—இசைபபாட்டு. தாளவொத்தெனினுமாம்.

தாழிவாய்க்குவளையங்கண்ணணேதியர்
ஏழைவாணெடுங்கணுமயங்கிவந்துசென்
றுழ்வாமின்குழலாலித்ததார்த்தரோ, (௯)
வேழைவாய்ச்சுரும்பினமிளைக்குமெனபவே.

ஏழைவாயென்றார் கள்ளருந்தும் இழிதகைமை நோக்கி; மயக்கம்பற்றியும் வந்துஞ்சென்றும் அலைதல் பற்றியுமெனினுமாம.

பளிங்குபோழ்ந்தியற்றியபலகைவேதிகை
விளிம்புதோய்நெடுங்கடைவீதிவாயெலாந்
துளங்குபூமாலையுஞ்சுரும்புந்தோரணமலான்
வளங்கொளபூங்கற்பகவனமும்போலுமே. (௧௦)

வனமுமென்ற உம்மை உயர்வுசிறப்பு.

காவிவாய்க்கருங்கணார்காமர்பூஞ்சிலம்
பாவிவாய்மாளிகையிராக்கேட்டொறுந்
தூவிவானபெடைதுணைதுறந்தகொல்லென
வாவிவாயிளவனமயங்குமென்பவே. (கக)

ஆவி—அகிற்புகை.

விலத்தகைப்பூந்துணர்விரிந்தகோதையர்
நலத்தகைச்சிலம்படிநவிலவூட்டிய
வலத்தகக்குழம்புதோய்ந்தரசவீதிகள்
புலத்திடைத்தாமரை பூத்தபோலுமே. (கஉ)

விலம—நீர்நிலை, பள்ளத்தாக்கு

கண்ணிலாங்கடிமலர்க்குவளைக்கற்றையும்
வெண்ணிலாத்திரளெனவிளங்குமாரமும்
வண்ணவானமல்லிகைவளாயமாலையு
மண்ணன்மாநகாக்கவைககரியவல்லவே. (கங)

கவை—கவர்வழி, குறுக்குவீதி.

தேம்பழுத்தினியநீர்மூன்றுந்தீம்பலா
மேம்பழுத்தளிந்தனசுளையும்வேரியு
மாம்பழக்கனிகளுமுதிர்ந்தண்டீட்டமுந்
தாம்பழுத்துளசிலதவளமாடமே. (கச)

மதுத்தண்டு வாகடங்களில் வாழையைக்குறிப்ப
தோர அற்றமொழியென்ப; ஆதாரங் கிடைத்திலது.

மைந்தருமகளிருமாலைகாலையென்
றந்தரப்படுத்தவாவிலாதனைமையாற்
சுந்தரப்பொறாறுக்கீன்றந்தபொன்னக
ரிந்திரவுலகமவந்திழிந்ததொக்குமே. (கரு)

அந்தரம்—பேதம்.

மற்றமாநகருடைமன்னன்றன்புய
மொற்றைவெண்குடைநிழலுலகெலாமுயிர்ப்
பெயரியான் பயாபதியெனும்பேருடை
வெற்றிவேன்மணிமுடிவேந்தர்வேந்தனே. (கசா)

மற்று, அசை. அம்மாநகரில் யகரந் தொக்கது.

பகுதி பயணம் என்றதைபோலப் பயாபதி பிரஜாபதியின் திரிபு. பிரசாபதியென்றும் பாடம்.

எண்ணினரெண்ணகப்படாதசெய்கையா
னண்ணியனகனறவாற்றத்துமாணையா
னணணுநர்பகைவரென்றிவர்க்குநாளினுந்
தண்ணியன்வெய்யனந்தானுமன்னனே. (கஎ)

ஆணை—ஆஞ்ஞாசக்கரம். நண்ணுநர்க்குத் தண்ணியன் பகைவர்க்கு வெய்யன்; நி[illegible]ரிறை.

நாமவேனாபதியுலகங்காத்தநாட்
காமவேள்கவர்கணைகலந்ததல்லது
தாமவேலவ்வயவாதந்தழலங்கொல்ட...
நாமநீர்வரைப்பகலிவதில்லையே. (கஅ)

ஆறிலொன்றறமெனவருளினல்லதோன்
மாறுசெய்பதுலகினினுவப்பதில்லையே
மாறுநின்றவரையும்வணக்கினல்லது
சீறிநின்றெவரையுஞ்செகுப்பதில்லையே. (க௯)

* "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலொன்றாங் — கைம்புலத்தாறோம்பல்" இல்வாழ்வார்க்கு இன்றியமையாத தலையறமாதலின் அரசனுக்கு ஆறிலொன்று கடமையாயிற்று. அதுவும் அறமென அருளினல்லது கொள்ளானென்பது தோன்ற நின்றமை காண்க.

ஆடிநீழலரசனையளிக்குமாய்கதிர்
முடிநிழல்மணிவரர்சரணமேழ்குமே
வடிநிழல்வனைகதிரெஃகின்மன்னவன்
குடைநிழலுலகெலாங்குளிரநின்றதே. (உ0)

மன்னியபகைக்குழாமாறும்வையகந்
துன்னியவிரும்பகைத்தொகையுமின்மையாற்
றன்னையுந்தரையையுங்காக்குமென்பதம்
மன்னவன்றிறத்தினிமருளவேண்டுமோ. (உக)

ஆறு;—காமக்குரோதலோபமோகமதமாச்சரியங்கள். துன்னிய பெயரெச்சமாயின் அரும்பகையெனவும், செய்யியவெனும் வினையெச்சமாயின் வரும்பகையெனவும் கொள்க.

---

* குறள், இல்வாழ்க்கை, ௩-ம் செய்யுள்.

MAHAMAHOPADHYAYA

மேலவர்மெய்ப்பொருள்விரிக்கும்விறுசா
னூலினாற்பெரியவர்நுழைந்தசுற்றமா
வாலுநீரன்னமோடாசவன்னமே
போலநின்றுலகினைப்பொதுமைநீக்கினான். (உ௨)

மேலவாமெனப் பாடங் கொளினுமாம்.

தானே அரசனாய்த் தனக்கோர் அரசனின்மையின் ஐங்குரவரில் அரசனையொழித்து நாற்பெரியவரெனப் பட்டது. நூலினாலே பெரியவரெனினும் அமையும்.

கொற்றினைப்புகழியான்குறிப்பினல்லதொன்
றிநமக்கிசைக்கெனவெண்ணுமெண்ணிலா
னொதுமலர்வெருவுறுநுவற்சியானபின்
னதுவவன்பகுதிகளமைதிவண்ணமே. (உ௩)

பகழியான் ஆறும் வேற்றுமைத்தொகை. இசைக் கென, செய்யுள் விகாரம். வண்ணம் பின்னதென முடிக்க. எண்ணிலானென்று பாடமாயின் நமக்கு என்றதைத் தன்மையொருமைச் சிறப்பாக்கிப் பகழி யான், எண்ணிலான், இவனது நுவற்சியான பின் னது அவன் பகுதிகள் அமைதிவண்ணம் என உரைக்க. பகுதி – இறை.

மறறவன்றேவியர்மகரவாரகுழைக்
கொற்றவர்குலங்களைவிளங்கத்தோன்றினா
ரிற்றதிம்மருங்குலென்றிரங்குநீர்மையார்
கற்றவரோதுபல்கலையின்முற்றியார். (உ௪)

பஞ்சினுங்கடியினார்பவளவாயினார்
கஞ்சமென்சுமனமுங்கடிந்ததாளினார்
வஞ்சியங்குழைத்தலைமதர்வைக்கொம்புத
மஞ்சுடரினார்க்கொசிந்தவையவைம்மையார்.

பஞ்சு ஏழாம்வேற்றுமைத் தொகை. பஞ்சின் கண்ணுமென விரிக்க. உம்மை விகாரத்தாற் றொக்கது. * "திங்கரும் பனுங்கு மாங்குயிற்கிளவி" † "திங் கரும் பனுங்கிய திருந்து தோள்களும்" என்றன போலக் கொள்ளினுமாம். அனுங்குதல்—வருந்துதல். சுமனசம்-பூ. கடிந்த, உவமவுருபு.

ஏமந்தொத்தலர்ந்தவரேமல்கோள்கற்பினார்
தாமந்தொத்தலர்ந்துதாழ்ந்திருண்டகூந்தலார்
தூமந்துச்சுடரொளிநலும்புதோளினார்
வாமத்தின்மயங்கிமைமதர்த்தவாட்கணார். (உகூ)

ஏமத்து ஒத்து; ஏமம்—சுகானுபவம்.

ஆயிரர்வரவர்க்கதிகத்தேவியர்
மாயிருவிசும்பினினிழிந்தமாண்பினார்
சேயிருங்காமனைத்தெய்வமன்னரென்
றேயுமாயிலாதவரிருவராயினார். (உஎ)

மேல் உகூ-ம் செய்யுளில் மாங்கொழுந்தசோக மென்றாற்போல ஈண்டுஞ் தாமரைத் தெய்வம் அன்ன ரென்றது மிக[illegible] சுவையையுஞ் சுட்டியது. சே நிறத்தைக் குறியாது அழகைக் கருதிற்று.

---

* நைடதம், அன்னத்தைத் தூதுவிட்ட படலம், கஎ-ம் செய்யுள்
† சிந்தாமணி, விமலையார் இலம்பகம், டுசு-ம் ,,

வேறு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சந்தம்;—விளம், மா, தேமா: விளம், மா, தேமா.

தீங்கரும் பயிழ்ந்த மூட்டித் தேனளாய்ப்
பிழிந்தபோது..,மோங்கிருங்கடலதானைவேந்த
னாங்குறுகருமன்சொற், றேங்கியத்நுவையவா
றெண்மிகாபதிமிக்கதேவி, தாங்கருங்கற்பிற்றங்
கைசசியென்பாள்சசியொடொப்பாள். (௨௮)

பூந்துழைமகளிர்க்கெல்லாம் பொன்மலர்
மணிக்கொம்பன்னா, டேங்குழன் மங்கையார்க
டிலதமாயத்திகழநின்றாள், மாங்கொழுந்தசோக
மென்றுங்கிரண்டுமேவயந்தகாலத், தாங்கொழுந்
தவற்றையெல்லாமணிபெறவலருமன்றே. (௨௯)

பெற பிறவினைப்பொருளில் வந்தது.

பெருமகனுருகும்பெண்மை மாண்பினும்
பேணிநாளு, மருவினும்புதியபோது மழலையங்
கிளவியாலுந், திருமகள்புலமையாக்குஞ்செல்வி
யெனறவர்கள்போல, விருவருமிறைவனுள்ளத்
தொருவராயினியரானார். (௩௦)

மாண்பு திருமகளுக்குங் கிளவி செல்விக்கும் நிரனிறையாகக் கொள்க. போல ஒருவராயினிய ரானாரென்றதனாற் பிரசாபதியினிடத்துத் திருமகளும் வாணியும் தம்முள் மாறுபடாது ஒருங்கிருந்தமையும் அறிக.

பேணிமன்னன் என்றும் பாடம்.

மன்னவனாவியாவாரமகளிரம்மகளிர்தங்க,
ளின்னுயிராகிநின்றா னிறைமகனிவர்கடங்கட்,
கென்னைகொ லொருவர்தம்மே லொருவர்க்கிங்
குள்ளமோட, முன்னவன் புணர்த்த வாறம்
மொய்ம்மலர்க்கணையினானே. (௬௧)

ஆவி—சந்திரகலை சூரியகலையாகிய சுவாசங்கள்; இடைகலை பிங்கலையெனவும்படும். ஒன்று இடநாசியிலும் மற்றது வலநாசியிலும் நிகழ்வது. உயிர்—பிராணன்; உள்ளம்—மனம். இதனாற் பிராணனும் மனமும் வேறாதல் தெளிக.

சொற்பகர்ந்துலகங்காக்குந்தொழில்புறத்
தொழியவாங்கி, மற்பகரகலத்தானை மனத்தி
டைப் பிணித்துவைத்தார், பொற்பகங்கமழப்
பூத்ததேந்துணர்பொறுக்கலாற்றாக், கற்பகக்கொ
ழுந்துங்காமவல்லியங்கொடியுமொப்பார். (௬௨)

மங்கையரிருவராகிமன்னவனொருவனாகி,
யங்கவரமர்ந்ததெல்லா மமர்ந்தருள்பெருகிநின்
றான், செங்கயன்மதர்த்தவாட்கட் டெய்வமா
மகளிர்தோறுந், தங்கியவுருவந்தாங்குஞ்சக்கரன்
றகைமையானான். (௬௩)

அமர்ந்தென்றார் ஒற்றுமை நயங்கருதி.
சக்கரனென்றது இந்திரனை.

முற்றுநீர்வளாகமெல்லா முழுதுடனிழற்
றுமூரி, யொற்றைவெண்குடையினீழ லுலகு
கண்படுப்பவோம்பக், கொற்றவ னெடுங்கட்
செவ்வாய்க் கோதையாவனையோம்ப, மற்றவர்க்
கரசசெல்வ மின்னணமமர்ந்ததன்றே. (௬௪)

கொற்றவன் உலகையோம்பக் கோதையர் அவனையோம்ப அரசசெல்வம் இன்னணம் அமர்ந்ததென்க. இன்னணம் இன்ன வண்ணமென்பதன் மரூஉ. ணகரம் மொழிக்கு முதலெழுத்தன்மையின் ஙனம்போல ணணம் ஒரு மொழியாகாதென்றறிக.

நகரச்சருக்கம் முற்றிற்று.

ஆ- விருத்தம் - ௬௪.

மூன்றாவது

குமாரகாலச்சருக்கம்

கலிவிருத்தம்

சந்தம்,—விளம், விளம், மா, கூவிளம்.

ஆங்கவர் திருவயிற்றமரர்கற்பமான்
*டீங்குடனிழிந்துவந்திருவர்தோன்றினார்
வாங்குநீர்த்திரைவளர்வளையுமக் கட
லோங்குநீர்நிழலுமொத்தொளிருமூர்த்தியார் (க)

சற்பம்—சுவர்க்கலோகம். ஆங்கு, அசை. வளையுநிழலுமொத்தொளிரும் மூர்த்தியாரிருவர் ஆண்டு இழிந்து வந்து திருவயிற்றுத் தோன்றினாரென்க. அமர்ந்தகர்ப்பமென்பது ஏட்டுப்பிரதிகளின் பாடம்.

பெண்ணிலாந்தகைப்பெருந்தேவிபோமர்க்
கண்ணிலாங்களிவளருவகைகைமிகத்
தண்ணிலாவுலகெலாந்தவழ்ந்துவான்கொள
வெண்ணிலாச்சுடரொளிவிசயன்றோன்றினான்.

நிலாம், நிலாவுமென்பதன் விகாரம். ஆங்கு, அசை. ஆம் களியெனினும் ஒக்கும்

அனனணம புராணனூ லகததத தோனறிய
கனனவி லலகநதோட காளை யானவன
மினனவில் விசுமபினின றிழிநது வீயசரீ,
மனனிய வளைபபக மலிரத் தோனறினன

கானுடை விரிதிரை வையக காககிய
மானுட வுடமபினுள மறைநது வநதத‌தை
தேனுடை யலஙகலான றெயவ மாபகந
தானடைந தமாவதற் குரிய டையலே

மாதிரசாலைச்சருக்கம் கசுஎ, கசஅ—ம செயயுள

ஏரணங்கிளம்பெருந்தேவிநாளுறச்
சீரணங்கவிரொளித்திவிட்டன்றோன்றினு
னீரணங்கொளிவளைநிரந்துவிம்மின
வாரணங்கலர்மழையமரர்சிந்தினார். (௩)

நான்கு அணங்கிற்கும் முறையே பெண், தெய்வம், விரும்புகின்ற, அழகு எனப் பொருள்கூறுக.

திசையெலாந்தெளிந்தனதேவர்பொன்னக
ரிசையெலாம்பெருஞ்சிறப்பியன்றவேற்பவர்
நசையெலாமவிந்தனநலியுந்தீவினைப்
பசையெலாம்பறந்தனபலர்க்குமென்பவே. (௪)

செய்தமாணகரியிற்சிறந்துசென்
றெய்தினார்குமராரம்பிராயமெய்தலு
மைதுழாநெடுங்கணார்மனத்துட்காமனு
ளைதுலாங்கவர்கணையரும்புவைத்தவே. (௫)

துழாம்—கலக்கும்; துழாவுமென்பதன் விகாரம். உலாம், உலாவுமென்பதன் விகாரம். வைத்தல்—செறிதல், முளைத்தல்.

காமருவலம்புரிகமழுமேனியன்
றாமரையகவிதழ்தடுத்தகண்ணினன்
றாமருளிருடுணர்ந்தனையகுஞ்சியன்
பூமருபொலங்குழைபுரளுங்காதினன். (௬)

கமழ்தல், தடுத்தல், மருளல் மூன்றும் உவமவுருபு. தாம், தாமத்தின் விகாரம். துணர்தல்—முகைத்தல்.

வாடலில்கண்ணியண்மலர்ந்தமார்பினன்
ருடவழ்தடக்கையன்றயங்குசோதியன்
கோடுயர்குன்றெனக்குலவுதோளினன்
பீடுடைநடையினன்பெரியநம்பியே. (எ)

பூவையம்புதுமலர்புரையுமேனியன்
றாவிரிதாமரைநொலைத்தகண்ணினன்
றிவிரியாம்பலிறசிவந்தவாயினன்
மாவிரிதிருமறுவணிந்தமார்பினன். (அ)

பூவை-காயாமரம். மா-இலக்குமி.

செங்கயல்வலம்புரிதிகிரியென்றிவை
தங்கியவங்கையனடித்தண்போதினன்
மங்கலமழகளிறனையசெல்கைய
னிங்குமுன்மொழிந்தவற்கிளையநம்பியே. (கூ)

திருவிளைத்துலகுகண்மலரத்தெவ்வர்தம்
புரிவளைநன்னகர்ச்செல்வம்புல்லென
வரிவளைத்தோளியர்மனத்துட் காதலா
மெரிவளைத்திடுவதோரிளைமையெய்தினார். (க0)

உவர்விளைகடற்கொடிப்பவளமோட்டிய
துவரிதழ்வாயவர்துளங்குமேனிய
ரவர்கடம்மருள்கொலோவணங்கனாய்மலர்
கவர்கணைகடைக்கணித்துருவுகாட்டினார். (கக)

கடலொளிமணிவண்ணன்கனவில்வந்தெம
துடலகம்வெறுவிதாயுள்ளம்வவ்வினான்
விடலிலனெம்முயிர்விடுக்குங்கொல்லென
மடவாலவர்குழாமயக்கமுற்றதே. (௧௨)

வார்வளைவண்ணனெம்மனத்துளான்பிற
ரேர்வளர்நெடுங்கணுக்கிலக்கமல்லனாற்
கார்வளர்கூந்தலாரிவர்கள்காதலை
யார்வளர்த்தவர்கொலென்பவருமாயினார். (௧௩)

கண்ணிலாங்கவினொளிக்காளைமார்திறத்
துண்ணிலாவெழுதருநாதனூழெரி
வெண்ணிலாச்சுடர்சுடவிரிந்துநாண்விடாப்
பெண்ணிலாம்பிறிதுயிர்பெரியதில்லையே. (௧௪)

நிலாம் — நிலாவும். நிலா, செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

திருவளர்செல்வர்மேற்சென்றசிந்தைநோ
யொருவரினொருவர்மிக்குடையராதலா
லுருவளரணங்கனாருள்ளங்காய்வதோ
ரெரிவளர்த்திடுவதோரிளமையெய்தினார். (௧௫)

மற்றோர்நாளமரிகைக்கொடிகொண்மாமணிச்
சுற்றுவான்சுடரொளிதழுவிச்சூழ்மலர்
முற்றிவண்டினம்விடாமுடிகொள்சென்னியக்
கொற்றவனிளையவர்குழையவைகினான். (௧௬)

மஞ்சுடைமணிக்குமாலைமண்டபத்
தஞ்சுடரகிற்புகையளைந்துதேனளாய்ப்
பஞ்சுடையமளிமேற்பள்ளியேற்பவன்
செஞ்சுடரிரிவதோர்நிறத்தனாயினான். (கஎ)

மன்னவன்றுயில்விடுத்தருளமைந்தர்பொற்
றுன்னியவுடையினர்துதைந்தகச்சையர்
பின்னியஞாணினர்பிடித்தவில்லின
ரன்னவரடிமுதற்காவனண்ணினார். (கஅ)

அடிமுதல், மீமிசை. தந்தையென்னும் பொருளை உணர்த்தியது.

காவல்—காவல்பூண்ட அரண்மனை.

காவலில் அடிமுதலை நண்ணினாரென்க.

தங்கியதவழொளிதடாவிவில்விட
மங்கலவுழைக்கலமருங்குசேர்ந்தன
வங்கவன்கண்கழூஉவருளிச்செய்தனன்
பங்கயமுகத்தர்பல்லாண்டுகூறினார். (கக)

மங்கலவுழைக்கலம்—மங்கலப்பொருளைத் தம்மிடத்துடைய கலங்கள். நரம்புசெறித்த மங்கலகரமான யாழெனினுமாம். மங்கலமும் யாழுமென எண்ணுப் பொருளிற் கோடலுமொன்று.

கழூஉவருளிச்செய்தனனென்பதைக் கழுவினானென ஒருசொன்னீர்மைத்தாகக் கொள்க.

அந்தணராசிடைகூறியாய்மலர்ப்
பைந்துணர்நெடுமுடிபயிலவேற்றினார்
செந்துணர்நறுமலர்தெளித்துத்தேவர்மாட்
டிந்திரனனையவனிறைஞ்சியேத்தினான். (உ0)

ஆசிடை — ஆசி. அந்தணர் முடியிலேற்றினர், அவன் பாதத்திற் தெளித்திறைஞ்சினானென்க.

விரையமர்கோதையர்வேணுக்கோலின
ருரையமர்காவல்பூண்கடையினூடுபோய்
முரசமர்முழங்கொலிமுரித்தானைய
னரசவைமண்டபமடைவதெண்ணினார். (உக)

தானையன் அரசசபா மண்டபம் அடைவதைக் கோதையருங் கோலினரும் காவற்கடையினூடு போய் எண்ணினாரென்க. எண்ணுதல்—கருதுதல், மதித்தல்.

யண

றன்னமென்னடையவர்பாவவாய்துகிற்
கன்னியர்கவரிகாலெறியக்காவலன்
ங்கடைமுற்றமுன்னினான். (உஉ)

மஞ்சிவர்வளநகர்காக்கும்வார்கழ

வெஞ்சுடர்வாளினர்விசித்தகச்சையர்
கஞ்சுகியவர்கண்மெய்காவலோம்பினார். (உ௩)

கஞ்சுகி — மார்பிற்குக் கவசம்போல அரசனை இடையறாது சூழ்ந்து காப்போர்; கஞ்சுகம் தாமே பூண்டு காப்போரெனவுஞ் சொல்லுப.

வாசநீர்தெளித்தலர்பரப்பிவானக
மேசுளிநிருக்கைபவிலங்குசென்னிய
மூசுதேனெடுங்கடைமூன்றும்போய்ப்புறத்
தோசைநீண்மண்டபமுவந்ததெய்தினன். (உச)

கடை — வாயில்; வானகம் இழிவுபட்டுள்ளே அடங்குதலாலும், சென்னியுடைமையாலும், நெடுமையானும் கோபுரவாயிலைக் கருதிற்றென்க.

வே று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சந்தம்;—விளம், மா, தேமா, விளம், மா, தேமா.

பளிங்கொளிசதுவப்போழ்ந்தபலகைசுண்
குலவச்சேர்த்தி, விளங்கொளிவிளிம்பிற்செம்
பொன்வேதிகை வெள்ளிவேயுட், டுளங்கொளி
பவளத்திண்காற் சுடர்மணிதவழும்பூமி, வளங்
கவின்றணையதாயமண்டபமலிபப்புக்கான்.(உரு)

மலிரப்புக்கானென்றும் பாடம்.

குஞ்சரக்குழவிகவ்விக் குளிர்மதிக்கோடு
போலு, மஞ்சுடரெயிற்றவாளி யணிமுகமலரா
வூன்றிச், செஞ்சுடரணிபொற்சிங்காசனமிசைச்
சேர்ந்தசெல்வன், வெஞ்சுடருதயத்துச்சிவிரிந்த
வெய்யவனொடொத்தான். (உசு)

பூமருபுரிந்தநுண்ணூற் புரோகிதன்பொ
றிவண்டாரகரு, மாமலரணிந்தகண்ணிமந்திரக்
கிழவர்மன்னு, சேமருகடலந்தானையிறைமகன்
குறிப்புநோக்கித், தாமரைச்செங்கட்சைகைப
ணிந்ததானந்தானார். (உஎ)

முன்னவரிருந்தபின்னை மூரிநீர்நிலகங்காக்
கு, மன்னவன்கழலைத்தங்கண்மணிமுடிநுதியிற்
றீட்டிப்,பின்னவன்பணித்தநானம்பெறுமுறைவ
கையிற்சேர்ந்தார், மின்னிவர்கடகப்பைம்பூண்
வென்றிவேல்வேந்தரெல்லாம். (உஅ)

வழிமுறைபயின்றுவந்த மரபினார் மன்
னர்கோமான், விழுமலரடிக்கண்மிக்கவன்பினார்
வென்றிநீரா, ரெழுவளர்த்தனையதோளாரிளையவ
ரின்னநீரா, ருழையவராகவைத்தானோடைமால்
களிற்றினானே. (உகூ)

காவலனென்னுஞ்செம்பொற் கற்பகங்க
ணின்றபோழ்தி, னாவலரென்னும்வண்டு நகைமு
கப்பெயரினாய, பூவலர்பொலிவுநோக்கிப் புலம
யங்களிப்பவாகிப், பாவலரிசையிற்றோன்றப்பா
டுபயின்றவன்றே. (௩0)

பண்ணமைமகரநல்யாழ்ப் பனுவனூற்புலவர்பாடி, மண்ணமர்வளாகமெல்லாமலர்ந்தநின் புகழோடொன்றி, விண்ணகம்விளங்குதிங்கள் வெண்குடைநிழலின்வைகிக், கண்ணமருலகங் காக்குங்கழலடிவாழ்கவென்றார். (௬௧)

மஞ்சுடைமலையின்வல்லி தொடரவான்வணங்கநின்ற, வஞ்சுடர்க்கடவுட்காத்தவருங்குலமலரத்தோன்றி, வெஞ்சுட ரெஃகமொன்றின் வேந்துகண்ணகற்றிநின்ற, செஞ்சுடர் முடியினாய்நின்கோலிதுசெல்கவென்றார். (௬௨)

அஞ்சுடர்க் கடவுளென்றது இக்ஷுவாகுவை; அருங்குலமென்றது வாகுவலி வமிசத்தை. காத்தல் ஈண்டு வளர்த்தலைக் கருதியது, இக்ஷுவாகுவை வளர்த்துப் போற்றிய வமிசமாதலின். இக்ஷுவாகு பேரருந் தவத்தியென்றும் அன்னோன் நெடுங்காலம் நிலைபெயராது தவஞ்செய்துழி அவன் தேகத்தைப் புற்று மூடியும் கொடிகள் சுற்றிப் படர்ந்தும் இருந்தனவென்றும் அவன் தவஞ்செய்த மலையில் அவனது தவப்பெருமையைக்கண்டு வானவர்கள் வந்துவணங்கி நின்றார்களென்றும் புராணக்கதை.

வேந்து கண்ணகற்றியென்பதற்கு மாற்றரசருடைய பெருமையை அகற்றியென்க. கண்—பெருமை. அரசு என்றாற்போல வேந்து என்பதை இறைமைப் பொருளிற் கொண்டு தனது இராச்சியத்தை இடமகலச்செய்தெனினுமாம். கண்—இடம்.

இன்னணம்பலருமேத்தவினிதினங்கிருந்த வேந்தன், பொன்னணிவாயில்காக்கும் பூங்கழ லவனைநோக்கி, யென்னவரேனுமாக நாழிகை யேழுகாறுங், கன்னவிற்றோளினாய்நீவராவிடுகாவ லென்றான். (௩௩)

என்னவரேனும்—எப்படிப்பட்டவரேனும்.

ஆயிடையலகின்மெய்ந்நூ லளவுசென்ற டங்கிநின்றான், சேயிடைநிகழ்வதெல்லாஞ் சிந் தையிற்றெளிந்தசீரான், மேயிடை பெறுவனா யின் வேந்துகாண் குறுவன்கொல்லோ, நீயிடை யறிசொல் லென்றோ னிமித்திகனெறியிற்சொன் னான். (௩௪)

அறிசொல்—அறிந்துசொல். நிமித்திகன் பெயர் அங்கதன்.

ஆங்கவனரசர்கோமான் குறிப்பறிந்தரு ளப்பட்டு, ரீங்கினிப்புகுதியென்றானிறைவனை யவனுஞ்சேர்ந்தான், வீங்கிருந் தானையானும் வெண்மலர்பிடித்தகையா, லோங்கிருந் தானங் காட்டி யுவந்தினிதிருக்கவென்றான். (௩௫)

உற்றதன்னொழுக்கிற்கேற்ப வுலகுபசார நீக்கிக், கொற்றவன்குறிப்புநோக்கி யிருந்தபின் குணக்குன்றொப்பான, முற்றியவுலகின்மூன்று காலமுமுழுதுநோக்கிக், கற்றநூற் புலமைதன் னைக் காட்டுதல்கருதிச்சொன்னான். (௩௬)

நீக்கி — நடத்தி, முற்றுவித்து.

கயந்தலைக்களிற்றினுயோர் கனக்கண்ட
துளதுகங்கு, ணயந்ததுதெரியினம்பி நளிகடல்
வண்ணன்றன்னை, விசும்பகத்திழிந்தவந்தார்
வேழம்வெண்போதுசேர்ந்த, தயங்கொளிமாலை
சூட்டித்தன்னிடமடைந்ததன்றே. (௩எ)

நளியென்பது பெருமையையும் விரிவையும் உணர்த்துவதோர் உரிச்சொல்.

மன்மலர்ந்தகன்றமார்ப மற்றதன்பயனுங்
கேண்மோ, நன்மலர்நகைகொள்கண்ணி நம்பி
தன்னுமமேத்தி, மின்மலர்ந் திலங்குமைம்பூண்
விஞ்சைவேந் தொருவன்வந்து, தன்மகளொருத்
திதன்னைத்தந்தனன்போகுமென்றான். (௩அ)

கட்பகர்திவலைசிந்துங் கடிகமழ் குவளைக்
கண்ணித், திட்பமாஞ்சிலையினுய்நீதெளிகநாளே
மூசென்ற, லொட்பமா யுரைக்கவல்லானொருவ
னோரோலைகொண்டு, புட்பமாகாண்டமென்னும்
பொழிலகத்திழியுமென்றான். (௩௯)

ஒருவனென்றது இரதநூபுரத்தரசன் சடியிடத்திலிருந்து தூதாகவரும் மருசியை.

ஒட்பம்–பேரறிவு.

புட்பமாகாண்டம் பிரசாபதியரசனுடைய நந்தன வனத்தின் பெயர்.

என்றவனியம்பக்கேட்டே யிருந்தவர்வி
யந்துநோக்கிச், சென்றுயர்திலகக்கண்ணிதந்திவிட்
டனித் திறத்தனையா, மொன்றிய வுலகமெல்லா
மொருங்குடை நீழற்காக்கும், பொன்றிகழலங்
கன்மார்ப போற்றிபொய்யன்றியென்றார். (சய)

போற்றி போற்றுதியென்னும் பொருட்டு.

உரையமைந் திருப்பவிப்பா லோதுநாழி
கையொன்றோட, முரசமொன்றதிர்த்ததோங்கி
யதிர்ந்ததுமுகத்தினாலே, யரசவைவிடுத்தவேந்த
னகத்தநூலவனைநோக்கி, வரையுயர் மாடக்கோ
யின் மந்திரசாலைசேர்ந்தான். (சக)

முகத்தினாலே—முகக்குறிப்புக்காட்டி. நோக்கி—கட்சைகையால் விடைகொடுத்து.

வேறு.

கலிவிருத்தம்.

சந்தம்;—விளம், விளம், மா, கூவிளம்.

கங்குல்வாய்க்கனவவன்கருதிச்சொற்றது
மங்கலப்பெரும்பயன்வகுத்தவண்ணமுங்
கொங்கலர்தெரியலான்கூறிக்கொய்ம்மலர்த்
தொங்கலார்நெடுமுடி சுடரத்தூக்கினான். (சஉ)

தூக்குதல்—ஆலோசித்தல். ஈண்டுத் தலைநிமிர்த்தி எழுந்தானெனினும் அமையும்.

சூழுநீருலகெலாந்தொழுதுதன்னடி
நீழலைநிரந்துநண்படுக்குநீர்மையா
னாழியங்கிழவனையலருமென்பது
பாழியந்தோளினாய்பண்டுங்கேட்டுமே. (சங)

நற்றவ முடையனே நம்பியென்றுபூண்
விற்றவழ் சுடரொளிவிளங்குமேனியக்
கொற்றவன் குறிப்பினையறிந்துகூறிய
பற்றவர்தொடங்கினார்மந்திரத்துளார். (சச)

கூறிப, செய்யியவெனும் வாய்பாடு. மற்று, அசை. மந்திரத்துளார் அறிந்து, கேட்டும், என்று, கூறிய, தொடங்கினாரென்க. இரண்டு பாட்டுங் குளகம்.

வேறு.

கலிவிருத்தம்.

சந்தம்;—மா, கூவிளம்: மா, கூவிளம்.

சங்கலேகையுஞ்சக்கிரலேகையு
மங்கையுள்ளனவையர்க்காதலாற்
சங்கபாணியான்சக்கிராயுத
மங்கையேந்துமென்றறையல்வேண்டுமே. (சரு)

வேறு.

சந்தம்;—விளம், விளம், மா, கூவிளம்.

விஞ்சையருலகுடைவேந்தன்றன்மகள்
வஞ்சியங்கொடியிடைமயிலஞ்சாயலா
ளஞ்சலின்றியங்கிவந்திழியுமாய்விடி
லஞ்சிநின்றிவ்வுலகாட்சிசெல்லுமே. (சசு)

நாமினிமற்றவன்மொழிந்தநாளினுற்
றேமருசிலாதலந்திருத்தித்தெய்வமாந்
தாமருமாலையாய்த்துருமகாந்தனைக்
காமருபொழிலிடைக்காவல்வைத்துமே. (சஎ)

என்றவர்மொழிந்தபினிலங்குபூணினா
னன்றதுபெரிதுமென்றருளினாடொறுஞ்
சென்றவன்காக்கெனமொழிந்துதேங்குழ
லின்றுணையவர்கடங்கோயிலெய்தினான். (சஅ)

காக்க என காக்கெனவென விகாரம்.

எரிபடுவிரிசுடரிலங்குபூணினான்
றிருவடிதொழுதுசெல்துருமகாந்தனும்
வரிபடுமதுகரமுரலவார்சினைச்
சொரிபடுபதுமலர்ச்சோலைநண்ணினான். (சகூ)

குமாரகாலச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் - ககஅ.

S. P. C K. Press, Vepery, Madras—1895.